**2026.04.20 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்**

**01. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளைச் செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு மற்றும் அப்போதைய தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையின் விதந்துரைகளை நடைமுறைப்படுத்தல்.**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக விசாரணை செய்வதற்கும், அவ்வாறான சம்பவங்களை தடுப்பதற்காக விதந்துரைகளை சமர்ப்பிப்பதற்கும் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு மற்றும் அப்போதைய தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விதந்துரைகளை அமுல்படுத்துவதற்காக 2021.05.17 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆயினும், குறித்த விதந்துரைகளை பிரயோக ரீதியாக அமுல்படுத்துவதை கண்காணிப்பதற்காக முறைசார்ந்த நிரந்தர பொறிமுறையொன்று இதுவரை தாபிக்கப்படாமையால், குறித்த விதந்துரைகளை அமுல்படுத்துவதன் பெறுபேறுகளை மதிப்பீடு செய்வதற்கு முறையொன்று இல்லை. அதனால், குறித்த விதந்துரைகளை வெற்றிகரமாக அமுல்படுத்துவதற்காக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் தேசிய பாதுகாப்பை அடிப்படையாகக் கொண்ட விரிவான ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட கட்டமைப்புடன் கூடிய பொறிமுறையொன்றை தாபிக்கவேண்டியதன் தேவை கண்டறியப்பட்டுள்ளதுடன், அதற்காக ஜனாதிபதி செயலகத்தின் கண்காணிப்பின் கீழ் குறித்த அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் பயங்கரவாத எதிர்ப்புச் செயற்பாடுகள் மற்றும் தேசிய பாதுகாப்பு விடயப்பரப்பு தொடர்பான நிபுணர் ஒருவருடன் கூடிய குழுவொன்றை நியமிப்பதற்காக பாதுகாப்பு அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் மற்றும் மாகாணங்களுக்கிடையிலான பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தை வழங்கும்போது கடைப்பிடிக்க வேண்டிய புதிய முறையொன்றை அறிமுகப்படுத்தல்.**

மாகாணங்களுக்கிடையிலான பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தை வழங்கும்போது கடைப்பிடிக்க வேண்டிய புதிய முறையை அமுல்படுத்துவதற்காக 2023.12.11 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, தயாரிக்கப்பட்டுள்ள புதிய முறையை மீளாய்வு செய்த பின்னர் 2025 ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (திருத்தச்) சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோள்களைக் கருத்திற்கொண்டு மாகாணங்களுக்கிடையிலான பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்காக புதிய முறையொன்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் தயாரிக்கப்பட்டுள்ளது. பயணிகள் போக்குவரத்துத் துறையில் தற்போது முனைப்பாக இயங்குகின்ற பேரூந்து உரிமையாளர்களை பாதுகாக்கின்ற வகையிலும், புதிய முதலீட்டாளர்களுக்கு பொதுப் போக்குவரத்துச் சேவையை வழங்குவதற்கான வாய்ப்புக்களை விரிவாக்கம் செய்வதன் மூலம் தரப்பண்பான சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு பயணிகளுக்குள்ள உரிமையை உறுதிப்படுத்தும் வகையிலும் குறித்த பொறிமுறை தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய பயணிகள் சேவைகள் அனுமதிப்பத்திரத்தை வெளியிடல் மற்றும் புதிய பொறிமுறையை அமுல்படுத்துவதற்காக பதில்கடமை போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.



163, කිරුළපන මාවත, කොළඹ 05, ශ්‍රී ලංකාව.
163, கிருலபன எவனியூ, கொழும்பு 05, இலங்கை.
163, Kirulapona Avenue, Colombo 05, Sri Lanka.
දු தொ T - (+94 11) 2515759
ෆැ பெ F - (+94 11) 2514753
ඊ மி E - dg@dgi.gov.lk
www.dgi.gov.lk
www.news.lk

03. **ஸ்ரீ புத்த புனித தந்ததாதுவை அமெரிக்காவின் டெக்சாஸ் பிராந்தியந்தியத்தில் அமைந்துள்ள மகாவிபஸ்ஸனா தியான நிலையத்திற்குக் கொண்டு சென்று வணக்கம் செலுத்துதல்**

அம்பாறை மாவட்டத்தின் லாஹுகல பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள கி.மு 1-2 நூற்றாண்டுக்குரிய நீலகிரி விகாரை அகழ்வின் போது கண்டுபிடிக்கப்பட்ட புனித தந்ததாது மற்றும் தாய்லாந்து அரசால் அன்பளிப்புச் செய்யப்பட்ட கங்காராம விகாரையில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள புனித கேசம் மற்றும் மகியங்கனை ரஜ மகா விகாரையில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள புத்தரின் தந்ததாது எமது நாட்டு பௌத்த மக்களின் பெரும் கௌரவத்திற்கும் வணக்கத்திற்கும் உரிய புனித சின்னங்களாகும். குறித்த புனித புத்த தந்ததாதுக்களை 2026.05.02 தொடக்கம் 2026.05.10 ஆம் திகதி வரை அமெரிக்காவின் டெக்சாஸ் பிராந்தியத்தில் மகாவிபஸ்ஸனா தியான நிலையத்தில் காட்சிப்படுத்துவதற்கும், வழிபாடு செய்வதற்கும் ஏற்பாடுகளை செய்யுமாறு குறித்த தியான நிலையத்தின் சங்கைக்குரிய ரதனகுண தேரர் அவர்களும் சங்கைக்குரிய பஞ்ஞாகர தேரர் அவர்களும் வேண்டுகோள் முன்வைத்துள்ளனர். அதற்கமைய, குறித்த புனித புத்த தந்ததாதுக்களை டெக்சாஸ் பிராந்தியத்தின் மகாவிபஸ்ஸனா தியான நிலையத்திற்கு கொண்டு செல்வதற்காகவும், குறித்த புனித தந்ததாதுக்களை வழிபாடு செய்வதற்காக பக்தர்களுக்கு வாய்ப்பு வழங்குவதற்காகவும் புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார விவகாரங்கள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. தேசிய வீடமைப்புக் கொள்கையைத் திருத்தம் செய்தல்**

சமகால அரசு 'வளமான நாடு – அழகான வாழ்க்கை' கொள்கைப் பிரகடனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள 'வசதியான இல்லம் - சுகாதார பாதுகாப்புடனான வாழ்வு' வீடமைப்புக் கொள்கை மூலம், இலங்கையில் குறிப்பாக குறைந்த வருமானங் கொண்ட சமூகத்தவர்களுக்கு போதியளவான தரமான வீடு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, வீடமைப்பு மற்றும் குடியேற்ற வசதிகள் அனைத்தையும் உள்ளடக்கும் வகையிலும், அதுதொடர்பாக புதிய உலகளாவிய போக்குகளையும் கருத்தில் கொண்டு, 2019 ஆம் ஆண்டில் இறுதியாகத் திருத்தம் செய்யப்பட்ட தேசிய வீடமைப்புக் கொள்கையை மீண்டும் திருத்தம் செய்வதற்கான தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, குடியேற்ற வசதிகள் தொடர்பாக சமகால சவால்களை வென்றெடுப்பதற்காக நிலைபெறுதகு தீர்வுகளைக் கண்டறிவதற்கு இயலுமை கிட்டும் வகையில் தேசிய வீடமைப்புக் கொள்கையைத் திருத்தம் செய்வதற்காகவும் மற்றும் குறித்த திருத்தங்களை மனிதக் குடியேற்ற வசதிகள் தொடர்பான நிபுணர்களுடன் கூடிய குழுவொன்றின் மூலம் மேற்கொள்வதற்காக வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. 2015 – 2019 ஆண்டுகளில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மூலம் ஆரம்பிக்கப்பட்ட வீடமைப்புக் கருத்திட்டம் தொடர்பாக மேலெழுந்துள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக விதந்துரைகளைப் பெற்றுக் கொள்வதற்கான விசேட நிபுணத்துக் குழுவொன்றை நியமித்தல்**

2015 – 2019 ஆண்டு காலப்பகுதியில் தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் கீழ் 2,562 வீடமைப்புக் கருத்திட்டங்கள் ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், அதன்கீழ் நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட மொத்த வீடுகளின் எண்ணிக்கை 64,407 ஆகும். அதற்கமைய, வீடமைப்பு உதவித்திட்டத்தின் கீழ் 1,138 கிராமங்களில், பயனாளிகளுக்கு வீட்டுக்கடன்களை வழங்குவதன் மூலம் 1.334 கிராமங்களிலும், இந்திய அரசின் நிதியுதவியுடன் 90 கிராமங்களிலும் என குறித்த கருத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. ஆயினும், அவற்றில் 386 கிராமங்களில் மாத்திரமே நிர்மாண வேலைகளைப் பூர்த்தி செய்து திறந்து வைக்கக்கூடிய நிலையில் உள்ளதுடன், வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட மொத்த வீடுகளின் எண்ணிக்கை 10,532 ஆகும். எஞ்சிய வீடுகளைப் பூர்த்தி செய்வதற்காக 11.26 பில்லியன் ரூபாய்கள் மேலதிகமாக நிதியொதுக்கீடு தேவையென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. குறித்த

கருத்திட்டங்களின் முன்னேற்றம் குறைவாகக் காணப்படுவதற்குப் பல்வேறு காரணங்கள் தாக்கம் செலுத்தியுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளதுடன், இக்கருத்திட்டங்களின் சமகால நிலைமைகளைப் பகுப்பாய்வு செய்து உண்மையாகவே வீட்டுத் தேவைகள் காணப்படுகின்ற குறைந்த வருமானங் கொண்ட குடும்பங்களை அடையாளங் காண்பதற்கும், இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ள கருத்திட்டங்களைத் துரிதமாகப் பூர்த்தி செய்து மக்களைக் குடியேற்றுவதற்கும், வழங்கப்பட்ட கடன்தொகையை அறவிடுவதற்கு முறையான பொறிமுறையொன்றைத் தயாரிப்பதற்குமான விடயங்களை ஆராய்ந்து விதந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக நிபுணர் குழுவொன்றை நியமிப்பதற்காக வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 06. இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்திற்கான பல்நோக்குக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான கருத்திட்டம்

இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்திற்கான பல்நோக்குக் கட்டிடமொன்றை, 486 மில்லியன் ரூபாய்கள் மதிப்பீட்டுச் செலவில் நிர்மாணிப்பதற்காக 2018 ஆம் ஆண்டில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருப்பினும், கருத்திட்டக் காலப்பகுதியில் எதிர்கொள்ள நேரிட்ட பல்வேறு தடைகளால் நிர்மாண வேலைகளை முழுமையாகப் பூர்த்தி செய்ய முடியவில்லை. குறித்த கருத்திட்டத்திற்கான திருத்தப்பட்ட மொத்தச் செலவு 663 மில்லியன்களாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன், நிர்மாணப் பணிகளை முழுமையாகப் பூர்த்தி செய்வதற்கு மேலதிகமாக 177 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கப்பட வேண்டியுள்ளது. அதற்கமைய, இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்தின் பல்நோக்குக் கட்டிடத்தின் நிர்மாணப் பணிகளைப் பூர்த்தி செய்வதற்கு இயலுமை கிட்டும் வகையில், குறித்த கருத்திட்டத்தின் மொத்தச் செலவு மதிப்பீட்டை 663 மில்லியன்களாகத் திருத்தம் செய்வதற்கு கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக கௌரவ பிரதமர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 07. வணிகக் கல்விக்கான செய்முறைகளை அடிப்படையாகக் கொண்ட கற்றல் நிலையமொன்றை வலய மட்டத்தில் நிறுவுதல்

வணிகக்கல்வியின் தரப்பண்பை விருத்தி செய்வதற்காக ஆசிரியர் அபிவிருத்தி, புதிய தொழிநுட்பம் மற்றும் வளங்களைப் பரிமாறிக் கொள்கின்ற மத்திய நிலையமாகப் பயன்படுத்தல், தொழில் மற்றும் தொடர் கல்விக்கான வாய்ப்புக்களை அதிகரித்தல், மட்டுப்படுத்தப்பட்ட பௌதீக வளங்கள் மற்றும் மனித வளங்களைப் பயனுள்ளவாறு பயன்படுத்தல், புதிய தொழிநுட்பம் மற்றும் விடயதான அறிவை ஒருங்கிணைத்தல், கல்விக்கான சம வாய்ப்புக்களை வழங்குவதற்கு மட்டுப்படத்தப்பட்ட வளங்களைப் பரிமாறிக் கொள்ளல் மற்றும் பிரதேச ரீதியாகவுள்ள ஆற்றல்வளங்களுக்கமைய திறன் விருத்தி செய்தல் போன்ற பல்வேறு நோக்கங்களை அடைவதற்காக வலய மட்டத்தில் கற்றல் நிலையங்களை ஆரம்பிப்பதன் முக்கிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, 289 மில்லியன் ரூபாய்கள் மதிப்பீட்டுத் தொகையின் கீழ் 2026 தொடக்கம் 2028 வரையான காலப்பகுதியில் பொதுக்கல்விக்கான பிரதான முதலீட்டுக் கருத்திட்டமாக வணிகக்கல்வியை மேம்படுத்துவதற்காக செய்முறைகளை அடிப்படையாகக் கொண்ட கற்றல் நிலையங்கள் 100 இனைத் தாபிப்பதற்கான கருத்திட்டத்திற்கு அரச முதலீட்டுத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக கௌரவ பிரதமர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனையைக் கருத்தில் கொண்டு, குறித்த கருத்திட்டத்தின் ஆரம்பகட்டமாக முன்னோடித் திட்டமாக 2026 ஆம் ஆண்டில் நாடளாவிய ரீதியில் 25 மாவட்டங்களை உள்ளடக்கியவாறு வலய நிலையங்கள் 25 ஆரம்பித்து செயற்படுத்துவதற்கும், முன்னோடிக் கருத்திட்டத்தின் முன்னேற்றத்தின் அடிப்படையில் எஞ்சிய வலயங்களில் நிலையங்களை அமைத்து செயற்படுத்துவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. களனிவெலி புகையிரதப் பாதையை அவிஸ்ஸாவெல்ல தொடக்கம் இரத்தினபுரி வரை நீடிப்பதற்கான சாத்தியவளக் கற்கை மற்றும் விபரத்திட்டத்தைத் தயாரிப்பதற்கான ஆலோசனைச் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்**

களனிவெலி புகையிரதப் பாதையை அவிஸ்ஸாவெல்ல தொடக்கம் இரத்தினபுரி வரை நீடிப்பதற்கான சாத்தியவளக் கற்கை மற்றும் விபரத்திட்டத்தைத் தயாரிப்பதற்காக 2025.10.21 அன்று அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதற்காக, விருப்பக்கோரல்கள் பெற்றுக் கொள்வதற்காக தேசிய போட்டி விலைமுறி முறையின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், விலைமனுதாரர்கள் 08 பேர் விருப்பக்கோரல்களைச் சமர்ப்பித்துள்ளனர். அவற்றில், குறுகிய பட்டியல்படுத்தப்பட்ட விலைமனுதாரர்களிடம் இருந்து சமர்ப்பிக்கப்பட்ட தொழிநுட்ப முன்மொழிவுகளை மதிப்பீடு செய்த பின்னர் தகைமை பெற்றுள்ள 04 நிறுவனங்களிடம் நிதி முன்மொழிவுக் கோரல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. குறித்த நிதி முன்மொழிவுகளை மதிப்பீடு செய்த பின்னர் களனிவெலி புகையிரதப் பாதையை அவிஸ்ஸாவெல்ல தொடக்கம் இரத்தினபுரி வரை நீடிப்பதற்கான சாத்தியவளக் கற்கை மற்றும் விபரத்திட்டத்தைத் தயாரிப்பதற்கான ஆலோசனைச் சேவை ஒப்பந்தத்தை M/s Resource Development Consultants (Pvt) Ltd இற்கு 356.22 மில்லியன் (வரியில்லாமல்) ரூபாய்களுக்கு வழங்குவதற்கு ஆலோசனை பெறுகைக் குழு சிபாரிசு செய்துள்ளது. அதற்கமைய, குறித்த சிபாரிசுகளின் பிரகாரம் பெறுகையை வழங்குவதற்காக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

09. **ஐக்கிய அரபு இராச்சியத்தின் டுபாய் விமான நிலையத்தில் ஸ்ரீலங்கன் விமான சேவையின் தரை நடவடிக்கைகச் சேவைகளுக்கான ஒப்பந்தத்தை வழங்கல்**

வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் விமானக் கம்பனியால் தற்போது விமானப் பயணிகள் மற்றும் பண்டங்களை ஏற்றிச் செல்கின்ற குறித்தொதுக்கிய நேர அட்டவணைக்கமைய விமானப் பயணங்களை டுபாய் விமான நிலையத்திற்கு மேற்கொண்டு வருகின்றது. விமானப் பயணிகளை ஒழுங்குபடுத்தல் மற்றும் தரைச் சேவைகளை வழங்குவதற்காக ஸ்ரீலங்கன் விமானக் கம்பனி மற்றும் டுபாய் விமான நிலையத்தில் குறித்த சேவைகளை வழங்குகின்ற ஒரேயொரு கம்பனியான Dnata கம்பனிக்கிடையில் கையொப்பமிடப்பட்டிருந்த தரைச் சேவைகள் ஒப்பந்தம் 2026.03.31 திகதியுடன் முடிவடைகின்றது. பண்டங்களைக் களஞ்சியப்படுத்தல் சேவைகளைப் வழங்குவதற்கு வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் விமானக் கம்பனி மற்றும் Dnata கம்பனிக்கும் இடையில் கையொப்பமிடப்பட்டுள்ள தரைச் சேவைகள் ஒப்பந்தம் 2026.06.30 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளது. விலைமுறிகள் மதிப்பீட்டுக் குழுவின் மற்றும் உயர்மட்ட நிரந்தரப் பெறுகைக் குழுவின் விதந்துரையின் பிரகாரம் கீழ்க்குறிப்பிட்டுள்ள ஒப்பந்தங்களை வழங்குவதற்காக துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

- 03 ஆண்டுகளுக்கு (2026.04.01 தொடக்கம் 2029.03.31 வரைக்குமான) காலப்பகுதிக்கு, ஐக்கிய அரபு இராச்சியத்தின் 33.04 திர்கம் மில்லியன் மதிப்பீட்டு செலவுக்கு டுபாய் விமான நிலையத்தில் ஸ்ரீலங்கன் விமான சேவையின் விமானப் பயணிகள் ஒழுங்குபடுத்தல் மற்றும் தரைச் சேவைகளைப் மேற்கொள்வதற்கான ஒப்பந்தம் Dnata கம்பனிக்கு வழங்கல்.
- 03 ஆண்டுகளுக்கு (2026.07.01 தொடக்கம் 2029.06.30 வரைக்குமான) காலப்பகுதிக்கு, ஐக்கிய அரபு இராச்சியத்தின் 7.6 திர்கம் மில்லியன் மதிப்பீட்டு செலவுக்கு டுபாய் விமான நிலையத்தில் ஸ்ரீலங்கன் விமான சேவையின் விமானப் பயணிகள் ஒழுங்குபடுத்தல் மற்றும் தரைச் சேவைகளைப் மேற்கொள்வதற்கான ஒப்பந்தம் Dnata கம்பனிக்கு வழங்கல்.

**10. சிறுநீரக நோயாளர்களின் குருதிக் கூழ்மப்பிரிப்புக்காகப் பயன்படுத்தப்படும் மருந்துப் பைகள் 800,000 இனை விநியோகிப்பதற்கான பெறுகை**

நீண்டகால சிறுநீரக செயலிழப்பால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளர்கள் குருதிக் கூழ்மப்பிரிப்புக்காக பெரிடோனியல் டயலிசிஸ் திரவம் பயன்படுத்தப்படுகின்றது. குறித்த திரவத்தைப் பெறுகை செய்வதற்காக சர்வதேச போட்டி விலைமுறிகள் கோரப்பட்டுள்ளன. அதற்காக 02 விலைமனுக்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. அதற்கமைய, உயர்மட்ட நிரந்தரப் பெறுகைக் குழுவின் விதந்துரைக்கமைய, கணிசமான பதிலளிப்புக்களுடன் கூடிய குறைந்தபட்ச விலைமனுதாரரான, Infuxion Lanka (Private) Limited, (Manufacturer: Peritone Health SDN BHD, Malaysia) இற்கு அலகொன்றின் விலை 1,112/= வின் கீழ், மற்றும் மருத்துவ வழற்கல் பிரிவுக்கு கொண்டுவந்து ஒப்படைக்கின்ற மொத்தச் செலவு 889.6 மில்லியன் ரூபாய்களுக்கு, 1.5% டெக்ஸ்ரோஸ் மற்றும் கல்சியம் திணிவு 1.25 mmol/L (2.5mEq/L) அடங்கியுள்ள, ஒருங்கிணைந்த இணையொத்த Y செற் மற்றும் நீலக் க்லாம்ப் உடன் கூடிய 02 லீற்றர் பெரிடொனியல் டயலிசிஸ் திரவப் பைகள் 800,000 இனை விநியோகிப்பதற்கான பெறுகையை வழங்குவதற்காக சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**11. 1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள 2026 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளை பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல்**

இலக்கம் 2312/77 மற்றும் 2023.01.01 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விசேட இறக்குமதி அனுமதிப்பத்திரத்தின் மூலம் விமானங்களுக்குப் பயன்படுத்தப்படும் டயர் உள்ளிட்ட மீண்டும் சில்லின் உருளை நிரப்பப்பட்ட டயர் இறக்குமதி செய்தல் தடை செய்யப்பட்டுள்ளது. ஆனாலும், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகளுக்கான HS குறியீடு 4012.13 இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள மீண்டும் சில்லின் உருளை நிரப்பப்பட்ட விமான டயர்களை இறக்கமதி செய்வதற்கான விடுவிப்பை செய்து வழங்குமாறு வேண்டுகோள் முன்வைக்கப்பட்டுள்ளது. அத்தியாவசிய நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்புத் தேவைகளைக் கருத்தில் கொண்டு, இயைபு முறைக் குறியீடு 4012.13 இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள மற்றும் சர்வதேச ரீதியாக அங்கீகாரம் பெற்ற விமான சேவைகள் அதிகாரிகளால் திட்டவட்டமாகக் குறிப்பிட்டுள்ள தேவைகளுக்கு இணங்கியொழுகின்ற, மீண்டும் சில்லின் உருளை நிரப்பப்பட்ட விமான டயர்களை சர்வதேச விமான சேவைகளை வழங்குகின்ற இலங்கையின் விமான சேவைகள் கம்பனியால் குறித்த விமான சேவைகள் கம்பனி மற்றும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட சர்வதேச விநியோகத்தர்களுக்கும் இடையில் சரியான வகையில் செயற்படுத்தும் விநியோக ஒப்பந்தத்தின் கீழ், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் விதந்துரையின் பிரகாரம் இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, 1969 ஆம் ஆண்டின்01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2026.03.23 திகதிய 2481/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள 2026 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளை பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**12. இலங்கை கைத்தொழில் இயல்மாற்றம் மற்றும் புத்தாக்க அதிகாரசபையைத் தாபிப்பதற்கான சட்டத்தை இயற்றுதல்**

அரசுக்குச் சொந்தமான வணிகமல்லாத நிறுவனங்களை மீளாய்வு செய்வதற்காக பிரதமரின் செயலாளரின் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் குழுவால் கைத்தொழில் அபிவிருத்திச் சபை, தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் சிறிய தொழில்முயற்சி அபிவிருத்திப் பிரிவுடன் ஒருங்கிணைத்து தனியொரு நிறுவனத் தாபிப்பதற்கு விதந்துரைக்கப்பட்டுள்ளது. குறித்த விதந்துரையின் அடிப்படையில் இலங்கை கைத்தொழில் இயல்மாற்றம் மற்றும் புத்தாக்க அதிகாரசபையைத் தாபிப்பதற்காக 2025.12.29 அன்று இடம்பெற்ற அமைச்சரவையில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சால் ஏற்புடைய அனைத்துத் தரப்பினர்களையும் கேட்டறிந்து மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தொழிநுட்ப ஒத்துழைப்புக்களுடன் சட்டமூலமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. குறித்த சட்டமூலத்தை அடிப்படையாகக் கொண்டு 'இலங்கை கைத்தொழில் இயல்மாற்றம் மற்றும் புத்தாக்க அதிகாரசபை' தாபிப்பதற்காக புதிய சட்டமூலத்தைத் தயாரிப்பதற்கு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**13. குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் பதவிக்கு நியமித்தல்**

குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் பதவியில் முழுநேர பதில்கடமைக்கு இலங்கை நிர்வாக சேவையின் விசேடதர அதிகாரியான இராஜ் சமிந்த பதிராஜ அவர்களை நியமிப்பதற்காக 2025.05.19 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த அதிகாரியை நிரந்த நியமனமாக குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் பதவிக்கு நியமிப்பதற்காக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**14. 'முழு நாடும் ஒன்றாக' போதைப்பொருள் தடுப்பு வேலைத்திட்டத்தின் கீழ் குறுகியகால சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையத்தைத் தாபித்தல் மற்றும் பணிக்குழாமினரை ஆட்சேர்ப்பு செய்தல்**

அண்மைக்காலத்தில் 'முழு நாடும் ஒன்றாக' போதைப்பொருள் தடுப்பு வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டதற்கு இணையாக சுயமாக முன்வந்து சிகிச்சை சேவைகளை நாடுகின்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதால், சிகிச்சைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக தற்போதுள்ள வதிவிட வசதிகள் போதுமானதாக இல்லையென்பது கண்டறியப்பட்டுள்ளது. அதன் பெறுபேறாக, நாடளாவிய ரீதியில் கட்டமைக்கப்பட்ட சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு சேவைகளை விரிவாக்கம் செய்யவேண்டிய அவசர தேவைகள் மேலெழுந்துள்ளது. அதற்குத் தீர்வாக சுயமாக சிகிச்சைக்காக முன்வருகின்றவர்களுக்கு குறுகியகால சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையமாக பரிமாற்றம் செய்வதற்குப் பொருத்தமான, 06 குறைப்பயன்பாட்டு அரச கட்டிடங்கள் அடையாளங் காணப்பட்டுள்ளதுடன், குறித்த நிலையங்களை அரச வர்த்தமானி மூலம் வெளியிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கமைய, முன்மொழியப்பட்டுள்ள குறுகியகால சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையங்கள் 06 இனைத் தாபிப்பதற்கும், அதற்குத் தேவையான பணிக்குழாமினரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கும் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்புக்களுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழியே மூலமாக அமையும்.**